
Purple Pond
Plan ▸ Protect ▸ Plough ▸ Prosper

360° Risk Mitigation & Financial Planning





# RECALCITRANT INDIA or USA?

# PurplePod

a monthly newsletter from PurplePond

**Edition : AUGUST 2025**

FIXED DEPOSITS | INSURANCES | MUTUAL FUNDS | NPS | NCD & BONDS | PMS | WILLS

www.purplepond.in



# UPFRONT

- The world economies continued to be consumed by the need to strike trade deals with  recalcitrant USA, A few succeeded and many continue to reposition their stands.
- Two days before deadline, US President confirmed a 25% tariff on India on its exports, effective August 7, 2025, in the light of no trade deal finalisation between the two countries yet, and an additional penalty of 25% with effective from August 27, 2025, due to India's purchase of Russian oil.
- India meanwhile is actively negotiating bilateral investment treaties (BITs) with over a dozen countries, including Saudi Arabia, Qatar, Israel, Oman, European Union, Switzerland, Russia, and Australia. Besides these nations, talks are also underway with Tajikistan, Cambodia, Uruguay, Maldives, Switzerland, and Kuwait.
- The border between Thailand and Cambodia suddenly turned into a war zone, land border crossings were shut, and both militaries exchanged heavy fire in the most serious confrontation since the 2011 Preah Vihear clashes. At least 38 people were killed, over 300 wounded and more than 3,00,000 civilians fled their homes due to airstrikes, shelling, and ground combat. Both sides agreed to an unconditional ceasefire in Kuala Lumpur, mediated by Malaysia, with support from China and the U.S
- Global markets meanwhile rose, with S&P led by the tech stocks, FTSE gaining on back of energy and healthcare stocks, Nikkei on back of concluded trade deal with USA and Hang Seng posting its strongest gains on hopes of easing trade tensions with USA.
- The US$ strengthened sharply while the British, Japanese and Asian emerging market currencies fell.

***- Team PurplePond***

# தொகுப்பாசிரியரிடமிருந்து ...



★ அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்ய பல உலக நாடுகள் போட்டியிட்டு வருகின்றன. சில நாடுகள் வெற்றி பெற்றுள்ளன, ஆனால் இன்னும் சில நாடுகள் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருக்கின்றன.

★ இந்தியா – அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் முடிக்க வைத்திருந்த காலக்கெடு முடிவதற்கு 2 நாட்களுக்கு முன், அமெரிக்க அதிபர் ஆகஸ்ட் 7, 2025 முதல் 25% சுங்கவரி விதிக்கப்படும் என்று அறிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை. மேலும், ரஷ்ய எண்ணெயை இந்தியா வாங்கியதற்காக ஆகஸ்டு 27 முதல் 25% கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது.

★ இந்தியா தற்போது 12-க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்கள் (BITs) குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதில் சவுதி அரேபியா, கட்டார், இஸ்ரேல், ஓமான், ஐரோப்பிய ஒன்றியம், சுவிட்சர்லாந்து, ரஷ்யா, ஆஸ்திரேலியா ஆகியவை அடங்கும். மேலும், தஜிகிஸ்தான், கம்போடியா, உருகுவே, மாலத்தீவு, குவைத் ஆகிய நாடுகளுடனும் ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன.

★ தாய்லாந்து – கம்போடியா எல்லை திடீரென மோதல் பகுதியாக மாறியது. நில எல்லை வழியாகச் செல்லும் பாதைகள் மூடப்பட்டு, 2011 ஆம் ஆண்டு ப்ரியாஹ் விஹியார் மோதலுக்குப் பிறகு ஏற்பட்ட மிகக் கடுமையான நிலைமையில், இரு தரப்பும் கடுமையான துப்பாக்கிச்சூடு மற்றும் குண்டுவீச்சில் ஈடுபட்டன. இதனால் குறைந்தது 38 பேர் உயிரிழந்தனர், 300-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். வான்வழி தாக்குதல், குண்டுவீச்சு, தரைப் போரின் காரணமாக 3 லட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். பின்னர், மலேசியாவின் முன்னெடுப்பில், சீனா மற்றும் அமெரிக்காவின் ஆதரவுடன், இரு நாடுகளும் நிபந்தனையற்ற சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

★ இதற்கிடையில், உலகப் பங்குச்சந்தைகள் உயர்வைக் கண்டன. அமெரிக்காவின் S&P குறியீடு டெக் பங்குகளால் முன்னிலை பெற்றது. பிரிட்டனின் FTSE, எரிசக்தி மற்றும் சுகாதாரத் துறையைச் சேர்ந்த பங்குகளின் வலிமையால் உயர்ந்தது. ஜப்பானின் நிக்கே, அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் நிறைவடைந்ததால் முன்னேறியது. ஹாங்காங் ஹாங் செங், அமெரிக்க வர்த்தக பதற்றம் குறையும் என்ற நம்பிக்கையால் இதுவரை காணாத அளவுக்கு அதிக உயர்வை பதிவு செய்தது.

★ அமெரிக்க டாலர் மதிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்தது. இதற்கு மாறாக, பிரிட்டன், ஜப்பான் மற்றும் ஆசிய வளர்ந்து வரும் நாடுகளின் நாணய மதிப்பு வீழ்ச்சி கண்டன.

*— பர்ப்பிள்பாண்ட்*

# Domestic News

Purple Pond
Plan ▸ Protect ▸ Plough ▸ Prosper
360° Risk Mitigation & Financial Planning

- The Cabinet Committee on Economic Affairs (CCEA) has approved 4 multi tracking projects worth ₹11,169 crore, across Maharashtra, Madhya Pradesh, West Bengal, Bihar, Odisha, and Jharkhand. These routes are essential for transportation of coal, cement, clinker, gypsum, fly ash, containers, agriculture commodities, and Petroleum products. This doubling & quadrupling project is to be completed by 2028-29 and will result in incremental freight loading of 95.91 million tonnes per annum (MTPA).

- With an objective to reduce road accidents and fatalities, especially among 2-wheeler users, union government has announced that w.e.f 1st Jan 2026, all new two-wheelers sold in India must be equipped with Anti-lock Braking Systems (ABS) regardless of engine size (currently applies only to engines above 125cc). Two wheelers account for 44% of all road deaths in India, and studies show ABS can reduce crash risks by 35% to 45%, and fatal accidents by up to 50%.

- Central government departments and ministries will be required to process all payments above ₹75 crore through the Reserve Bank of India's e-Kuber system w.e.f July 16, 2025. The objective is to reduce to less than 24-hours the reconciliation of accounts by government departments. It is planned to further lower the threshold to ₹50 crore from FY 2026-27.

- The union has approved a ₹20,000 crore equity infusion into NTPC Green Energy Ltd, a subsidiary of NTPC, to scale up investments in solar, wind, and green hydrogen projects. The target is to reach 60 GW by 2032. So far, NTPC has invested ₹ 7,500 crore in NGEL.

- The union cabinet has approved a ₹30,000 crores allocation to The Prime Minister Dhan-Dhaanya Krishi Yojana (PMDDKY), introduced in the Union Budget 2025–26, which aims to develop 100 agriculture-focused districts by integrating 36 existing schemes under 11 central ministries with the Key Objectives being
  - Improving agricultural productivity
  - Encouraging crop diversification and sustainable practices
  - Strengthening post-harvest infrastructure
  - Expanding irrigation networks
  - Improving access to both short- and long-term agricultural credit
  - The selected districts were identified based on low agricultural productivity, moderate crop density, and weak credit access. And at least one district from each state to be covered.

- The Centre has fixed the prices of 71 key drug formulations, including medicines approved for treating metastatic breast

# உள்நாட்டு சந்தையின் முக்கிய சிறப்பம்சங்கள்

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு (CCEA), மொத்தம் ₹11,169 கோடி மதிப்பிலான 4 ரயில் பாதை விரிவாக்க திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டங்கள் மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார், ஒடிசா மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. இந்தப் பாதைகள் நிலக்கரி, சிமெண்ட், கிளிங்கர், ஜிப்சம், பறக்கும் சாம்பல் (Fly ash), கண்டெய்னர்கள், வேளாண் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய பொருட்கள் போன்றவற்றை கொண்டு செல்ல மிகவும் முக்கியமானவை. இரு தடம் மற்றும் நான்கு தடம் ரயில் பாதை அமைக்கும் இந்தத் திட்டங்கள் 2028–29க்குள் நிறைவுபெறும். இதனால் ஆண்டுக்கு கூடுதலாக 95.91 மில்லியன் டன் சரக்குகளை ஏற்றிச் செல்லும் திறன் உருவாகும்.

- இருசக்கர வாகனங்களில் விபத்துகள் மற்றும் உயிரிழப்புகள் இந்தியாவில் சாலை பாதுகாப்புக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளன - சாலை மரணங்களில் சுமார் 44% இதற்கே காரணம். இதை குறைப்பதற்காக, மத்திய அரசு முக்கிய முடிவு எடுத்துள்ளது. 2026 ஜனவரி 1 முதல், இந்தியாவில் விற்கப்படும் எல்லா புதிய இருசக்கர வாகனங்களிலும் -என்ஜின் அளவு எதுவாக இருந்தாலும் - Anti-lock Braking System (ABS) கட்டாயமாக பொருத்தப்பட வேண்டும். (தற்போது, இது 125cc-க்கு மேற்பட்ட வாகனங்களுக்கு மட்டுமே கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது). ABS உள்ள வாகனங்களில் விபத்து அபாயம் 35% - 45% வரை குறைகிறது என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

- மத்திய அரசு துறைகள் மற்றும் அமைச்சகங்கள், 2025 ஜூலை 16 முதல், ₹75 கோடிக்கு மேற்பட்ட பணப்பரிவர்த்தனைகளை இந்திய ரிசர்வ் வங்கியின் e-Kuber அமைப்பு வழியாக மேற்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரசுத் துறைகள் மேற்கொள்ளும் கணக்குச் சரிபார்ப்பை 24 மணி நேரத்திற்குள் முடிக்கச் செய்வதே இதன் நோக்கம். மேலும், 2026−27 நிதியாண்டு முதல், இந்த வரம்பு ₹50 கோடியாகக் குறைக்கப்படும்.

- மத்திய அரசு, NTPC Green Energy Ltd (NTPC-இன் துணை நிறுவனம்) நிறுவனத்தில் ₹20,000 கோடி பங்கு முதலீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் சூரிய ஆற்றல், காற்றாலை, பசுமை ஹைட்ரஜன் போன்ற திட்டங்களில் முதலீடுகளை விரைவாக விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. 2032க்குள் 60 ஜிகாவாட் (GW) திறனை அடைவதே இதன் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை NTPC, இந்தத் துணை நிறுவனத்தில் ஏற்கனவே ₹7,500 கோடி முதலீடு செய்துள்ளது.

- மத்திய அமைச்சரவை, ₹30,000 கோடி நிதியை “பிரதமர் தன்தான்ய கிருஷி திட்டத்துக்கு (PMDDKY)”ஒதுக்கியுள்ளது. இந்தத் திட்டம், 2025−26 மத்திய பட்ஜெட்டில் அறிமுகப் படுத்தப்பட்டது. மத்திய அமைச்சகங்களின் கீழ் செயல்படும் 36 திட்டங்களை ஒருங்கிணைத்து, 100 வேளாண்மை மையப்படுத்தப்பட்ட மாவட்டங்களை உருவாக்குவது இதன் முக்கிய இலக்காகும். இவை:
    - ✦ வேளாண்மை உற்பத்தித் திறனை உயர்த்துவது
    - ✦ பயிர் பல்வகைப்படுத்தல் மற்றும் நிலையான நடைமுறைகளை ஊக்கு விப்பது
    - ✦ அறுவடைக்குப் பின் தேவையான வசதிகளை (களஞ்சியம், குளிர்சாதன மையங்கள் போன்றவை) வலுப்படுத்துவது
    - ✦ பாசன வசதிகளை விரிவுபடுத்துவது
    - ✦ குறுகிய மற்றும் நீண்டகால வேளாண்மை கடன்களை எளிதில் பெறும் வசதியை மேம்படுத்துவது
    - ✦ குறைந்த வேளாண்மை உற்பத்தித் திறன், மிதமான பயிர் அடர்த்தி, பலவீனமான கடன் அணுகல் ஆகிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் குறைந்தபட்சம் ஒரு மாவட்டம் இதில் இடம்பெறும்.

- மத்திய அரசு, 71 முக்கிய மருந்துகளின் விலையை நிர்ணயித்துள்ளது. இதில், பரவிய மார்பகப் புற்றுநோய் (metastatic breast cancer), அலர்ஜி (ஒவ்வாமை), நீரிழிவு போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளும் அடங்கும்.

# Macros

- As per data released by Reserve Bank of India (RBI), bank credit till June 2025, shows year-on-year (y-o-y) growth of
    - 10.2% credit to non-food sector, a decline from 13.8% growth in the same period last year.
    - 6.8% credit to the agriculture and allied activities sector,a decline from 17.4% growth in the same period last year.
    - 5.5% credit to the industrial sector,a decline from 7.7% the previous year.
    - However, within the industrial segment, loans to micro, small, and medium enterprises (MSMEs) maintained steady growth, and credit to sub-sectors such as engineering, construction, and textiles showed accelerated increases.
    - In services sector credit growth was 9.6%, a decline from 15.1% growth in the same period last year. This decline was primarily driven by slower credit expansion to non-banking financial companies (NBFCs), although segments like computer software and professional services continued to post good growth.
    - Personal loans grew by 14.7%, a decline from 16.6% growth in the same period last year. The slowdown was largely due to weaker growth in vehicle loans, credit card dues, and other personal lending.
- Retail inflation (CPI) slumped to a 77-month low in June to 2.1% aided by fall in prices of Vegetables, pulses and spices.
- The Employees' Provident Fund Organisation (EPFO) reported a record-breaking net addition of 20.06 lakh members in May 2025, indicating expanding employment opportunities.
- India's electronics exports have soared past $40 billion, marking an 8-fold growth over the last 11-years, however there is a good possibility of this slowing down considering the new tariffs imposed by US.
- In June 2025, India's goods exports remained flat at $35.1 billion, while imports dipped 3.8% to $53.9 billion, helping narrow the trade deficit to a 4-month low of $18.8 billion. Imports dipped due to a sharp fall in shipment of gold (down 26%), crude petroleum (down 8.4%) and diamonds and coal.
- In June 2025, the India's services exports (receipts) stood at $32.11 billion, a 12% growth over June 2024. The export growth in April and May 2025, too registered 8.8% & 9.6% growth respectively. The services' imports (payments) reached $15.90 billion, a 5% rise over June 2024.
- India remains the largest recipient of inward remittances with the diaspora sending home $135.46 billion in the FY 2024-25 which is 14% higher from the FY2023-24 and double from $61 billion in FY 2016-17. Interestingly, India's remittance receipts have generally remained higher than India's gross inward foreign direct investment (FDI) flows.
- FDI inflows into India crossed the $1 Trillion milestone in the April 2000-March 2025 period, In FY2024-25 alone it stood at US$ 81 billion. About 25% of the FDI came through the Mauritius route. It was followed by Singapore (24%), the US (10%), the Netherlands (7%), Japan (6%), the UK (5%), the UAE (3%) and Cayman Islands, Germany & Cyprus accounted for 2% each.

**Corporate News**

- Indian fertiliser companies IPL, KRIBHCO and CIL have signed an agreement with Saudi Arabian mining company Maaden for supply of 3.1 million MT of Di-ammonium phosphate (DAP) fertiliser per annum for 5- years beginning this year, with provision for extension of 5-years with mutual consent. This will overcome the shortfall we are facing due to China imposed restrictions on export of phosphate, a key ingredient for DAP, to India. DAP is the 2$^{nd}$ most used fertiliser after urea in India.
- India's Tata Motors is acquiring the commercial vehicle business of Iveco Group from Italy-based Agneli family (who own 14 iconic brands including Alfa Romeo, Citroen, Chrysler, Fiat, Ferrari, Jeep, Maserati, Peugeot) for an approximate US$4.4 billion, through its Dutch subsidiary, TML CV Holdings PTE LTD.
- Titan industry (which owns Tanishq) will buy 67% in jewellery retailer Damas from Qatar listed Mannai Corporation for ₹ 1,630 crore. Damas established in 1907, operates 146 stores across 6 GCC countries - UAE, Saudi Arabia, Qatar, Oman, Kuwait and Bahrain. This will establish Titan as one of the prominent Indian jewellers in West Asia.
- Private equity major Multiples, stock market investor Aakash Bhansali, and Carat Lane founder Mithun Sacheti, will together buy 32% from promoter Dilip Piramal for ₹ 1,763 crore to take management control of luggage maker VIP Industries. They will also make an open offer to the company's public shareholders for another 26% at ₹ 1,438 crore. Mr. Dilip, who is the elder brother of Mr. Ajay Piramal (Piramal Enterprises), owned 52% of VIP, after the deal will retain 17%.
- Reliance Group, Adani Group, Mahindra Group, JK Cement, Jindal Group, Toyota India, Schneider Electric and ArcelorMittal Nippon Steel have expressed interest in partnering with the skill development and entrepreneurship ministry in the ₹ 60,000-crore National Scheme for Industrial Training Institute (ITI) Upgradation.
    - The scheme envisages upgradation of 1,000 ITIs and aims to impart skills training to 2 million youths over a 5-year period with targeted courses that address the human capital needs of industries.
    - The Centre will contribute ₹ 30,000 crore under the scheme, while states will put in ₹ 20,000 crore and industry ₹ 10,000 crore, with co-financing to the extent of 50% of central share equally by the Asian Development Bank and the World Bank.
    - Each of the above companies has submitted to the ministry their preferred states and the sectors in which they are keen to set up "hub and spoke ITIs" to impart skills training.

  Talks are also on to get onboard Larsen & Toubro, Bajaj Auto and Aditya Birla, Bharat Heavy Electricals Ltd,

# பொதுப் பொருளாதார நிலவரம்

Purple Pond
Plan • Protect • Plough • Prosper
360° Risk Mitigation & Financial Planning

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வெளியிட்ட தரவின்படி, 2025 ஜூன் மாதம் வரையிலான வங்கி கடன் வளர்ச்சி, வருடாந்திர அடிப்படையில் (y-o-y):
    - ✦ உணவு சாராத துறைகளுக்கான கடன் 10.2% வளர்ச்சியை மட்டும் பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இது 13.8% வளர்ச்சி கண்டிருந்தது.
    - ✦ வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளுக்கான கடன் 6.8% மட்டுமே உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இது 17.4% வளர்ச்சி கண்டிருந்தது.
    - ✦ தொழில்துறைக்கு வழங்கப்பட்ட கடன் 5.5% உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் 7.7% வளர்ச்சியை விடக் குறைவாகும்.
    - ✦ ஆனால், தொழில்துறையின் உட்பிரிவுகளில், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSMEs) வழங்கப்பட்ட கடன்கள் நிலையான வளர்ச்சியைக் கண்டன. அதேசமயம், பொறியியல், கட்டுமானம், நெசவு போன்ற துணைத் துறைகளில் கடன் வழங்கல் வேகமாக அதிகரித்தது.
    - ✦ சேவைத் துறைக்கு வழங்கப்பட்ட கடன் 9.6% உயர்ந்தது. இது, கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இருந்த 15.1% உயர்வை விடக் குறைவானது. இக்குறைவு, வங்கியல்லா நிதி நிறுவனங்களுக்கு (NBFCs) வழங்கப்பட்ட கடன் மந்தமாக அதிகரித்ததாலேயே ஏற்பட்டது. ஆனால், கணினி மென்பொருள் மற்றும் தொழில்முறை சேவைகள் நல்ல வளர்ச்சியைக் கொண்டிருந்தன.
    - ✦ தனிநபர் கடன்கள் 14.7% உயர்ந்தன. இது, கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இருந்த 16.6% உயர்வை விட குறைவானது. இந்தக் குறைவு, வாகனக் கடன், கிரெடிட் கார்டு பாக்கிகள் மற்றும் பிற தனிநபர் கடன்களில் வளர்ச்சி மந்தமடைந்ததாலேயே ஏற்பட்டது.
- சில்லறைப் பணவீக்கம் (நுகர்வோர் விலைக் குறியீட்டால் அளவிடப்படுவது - Consumer Price Index) ஜூன் மாதத்தில் 2.1% ஆகக் குறைந்தது. இது, கடந்த 77 மாதங்களில் பதிவான மிகக் குறைந்த நிலையாகும். காய்கறிகள், பருப்பு வகைகள் மற்றும் மசாலா பொருட்களின் விலை குறைந்ததே இதற்குக் காரணம்.
- 2025 மே மாதத்தில், பணியாளர் பங்களிப்பு நிதி நிறுவனம் (Employees' Provident Fund Organisation - EPFO) 20.06 லட்சம் புதிய உறுப்பினர்களைச் சேர்த்ததாக தெரிவித்துள்ளது. இது ஒரு சாதனைஅளவிலான உயர்வாகும். வேலை வாய்ப்புகள் தொடர்ந்து விரிவடைந்து வருவதை இது தெளிவாகக் காட்டுகிறது.
- இந்தியாவின் மின்னணு பொருட்கள் ஏற்றுமதி $40 பில்லியனைத் தாண்டியுள்ளது. இது கடந்த 11 ஆண்டுகளில் 8 மடங்கு உயர்வாகும். எனினும், அமெரிக்கா விதித்துள்ள புதிய சுங்க வரிகளால், இந்த வளர்ச்சி மந்தமாகும் வாய்ப்பு உள்ளது.
- 2025 ஜூன் மாதத்தில், இந்தியாவின் பொருட்கள் ஏற்றுமதி $35.1 பில்லியனில் நிலைத்திருந்தது. இறக்குமதி 3.8% குறைந்து, $53.9 பில்லியனாக இருந்ததால், வர்த்தக பற்றாக்குறை 4 மாதங்களில் இல்லாத அளவுக்கு குறைந்து $18.8 பில்லியனாக இருந்தது. தங்கம் (26% வீழ்ச்சி), கச்சா எண்ணெய் (8.4% குறைவு), வைரம் மற்றும் நிலக்கரி இறக்குமதி இந்தச் சரிவுக்கு முக்கிய காரணமாக இருந்தன.
- 2025 ஜூன் மாதத்தில், இந்தியாவின் சேவைத் துறை ஏற்றுமதி $32.11 பில்லியனாக இருந்தது. இது 2024 ஜூனுடன் ஒப்பிடும்போது 12% அதிகம். ஏப்ரல் மற்றும் மே 2025-இல் ஏற்றுமதி வளர்ச்சி முறையே 8.8% மற்றும் 9.6% ஆக இருந்தது. அதே நேரத்தில், சேவைத் துறை இறக்குமதி $15.90 பில்லியனாக இருந்தது, இது 2024 ஜூனுடன் ஒப்பிடும்போது 5% உயர்வாகும்.
- வெளிநாடுகளில் இருந்து அதிக பணஅனுப்பல்கள் பெறும் நாடாக இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. 2024–25 நிதியாண்டில் வெளிநாடுகளில் உள்ள இந்தியர்கள் $135.46 பில்லியன் அனுப்பியுள்ளனர். இது 2023–24-ம் ஆண்டைவிட 14% அதிகமாகும். 2016–17-இல் கிடைத்த $61 பில்லியனை விட இது இருமடங்கு. இந்த பணஅனுப்பல்கள் பெரும்பாலும் இந்தியா பெறும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI) விட அதிகமாகவே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.
- 2000 ஏப்ரல் முதல் 2025 மார்ச் வரை இந்தியா பெற்றுள்ள வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) $1 டிரில்லியன் என்ற முக்கிய மைல்கல்லை கடந்துள்ளது. 2024–25 நிதியாண்டில் மட்டும் $81 பில்லியன் முதலீடு வந்துள்ளது. இதில் சுமார் 25% மொரீஷியஸ் வழியாக வந்தது. அதன்பின் சிங்கப்பூர் (24%), அமெரிக்கா (10%), நெதர்லாந்து (7%), ஜப்பான் (6%), இங்கிலாந்து (5%), ஐக்கிய அரபு அமீரகம் (3%) ஆகியவை. கெய்மேன் தீவுகள், ஜெர்மனி, சைப்ரஸ் ஆகிய நாடுகள் தலா 2% பங்களித்தன.

**நிறுவனங்கள் பற்றிய செய்திகள்**

- இந்திய உர நிறுவனம் IPL, KRIBHCO மற்றும் CIL ஆகியவை, சவுதி அரேபியாவின் சுரங்க நிறுவனம் ‘மாடன்’ உடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் படி, ஆண்டுதோறும் 3.1 மில்லியன் மெட்ரிக் டன் டை அம்மோனியம் பாஸ்பேட் (DAP) உரம், 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். பரஸ்பர சம்மதத்தின் பேரில், மேலும் 5 ஆண்டுகள் நீட்டிக்கவும் வாய்ப்பு உள்ளது. சீனா இந்தியாவுக்கு பாஸ்பேட் ஏற்றுமதியில் விதித்துள்ள கட்டுப்பாடுகள் காரணமாக ஏற்பட்ட பற்றாக்குறையை, இந்த ஒப்பந்தம் தீர்க்கும். DAP என்பது, இந்தியாவில் யூரியாவிற்கு அடுத்த அதிகம் பயன்படுத்தப்படும் உரமாகும்.
- இந்தியாவின் டாடா மோட்டார்ஸ், நெதர்லாந்தில் பதிவு செய்யப்பட்ட தனது துணை நிறுவனம் TML CV Holdings PTE LTD மூலம், இத்தாலிய Agnelli குடும்பம் சொந்தமான Iveco Group-ன் வர்த்தக வாகன பிரிவை சுமார் US$4.4 பில்லியனுக்கு கையகப்படுத்துகிறது. அக்னெல்லி குடும்பம் Alfa Romeo, Citroën, Chrysler, Fiat, Ferrari, Jeep, Maserati, Peugeot உள்ளிட்ட 14 உலகப்புகழ்பெற்ற கார் பிராண்டுகளைத் தங்களது வசம் வைத்துள்ளனர்.
- தனிஷ்க் பிராண்டைச் சொந்தமாகக் கொண்டுள்ள டைட்டன் நிறுவனம், கத்தார் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட மன்னாய் கார்ப்பரேஷனிலிருந்து டாமாஸ் நகை விற்பனை நிறுவனத்தின் 67% பங்குகளை ₹1,630 கோடிக்கு வாங்குகிறது. 1907-ல் தொடங்கப்பட்ட டாமாஸ், 6 வளைகுடா நாடுகளில் (ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவூதி அரேபியா, கத்தார், ஓமான், குவைத், பஹ்ரைன்) 146 கடைகளை நடத்தி வருகிறது. இந்த நடவடிக்கையின் மூலம் மேற்கு ஆசியாவின் முக்கிய இந்திய நகைக் கம்பெனிகளில் ஒன்றாக டைட்டன் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும்.
- பிரைவேட் ஈக்விட்டி நிறுவனம் மல்டிப்பிள்ஸ், பங்குச் சந்தை முதலீட்டாளர் ஆகாஷ் பன்சாலி மற்றும் கராட்லேன் நிறுவனர் மிதுன் சசேத்தி இணைந்து, ப்ரமோட்டர் திலிப் பிரமலிடமிருந்து ₹1,763 கோடிக்கு 32% பங்குகளை வாங்கி, ஏஜீ இன்டஸ்ட்ரீஸ் (லக்கேஜ் தயாரிப்பு நிறுவனம்) நிறுவனத்தின் மேலாண்மை கட்டுப்பாட்டைப் பெற உள்ளனர். மேலும், பொதுமக்கள் பங்குதாரர்களிடமிருந்து கூடுதல் 26% பங்குகளை வாங்குவதற்கான ஓப்பன் ஆ.்.பர் (open offer) ஒன்றையும் ₹1,438 கோடிக்கு அறிவித்துள்ளனர். இந்த ஒப்பந்தத்திற்குப் பின், 52% பங்குகளை வைத்திருந்த திலிப் பிரமல் 17% பங்குகளை வைத்திருப்பார். அவர், பிரமல் என்டர்பிரைசஸின் அஜய் பிரமலின் மூத்த சகோதரராவார்.
- ரிலையன்ஸ் குழுமம், அதானி குழுமம், மஹீந்திரா குழுமம், ஜே.கே. சிமெண்ட், ஜிந்தால் குழுமம், டொயோட்டா இந்தியா, ஷ்னைடர் எலக்ட்ரிக் மற்றும் ஆர்சலர் மிட்டல் நிப்பான் ஸ்டீல் ஆகியவை, ₹60,000 கோடி மதிப்புள்ள தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI) மேம்பாட்டு திட்டத்தில் திறன் வளர்ச்சி மற்றும் தொழில் முனைவுத்துறை அமைச்சகத்துடன் இணைந்து செயல்பட ஆர்வம் காட்டியுள்ளன.
    - ✦ இந்தத் திட்டத்தின் கீழ் 1,000 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மேம்படுத்தப்பட உள்ளன. அடுத்த 5 ஆண்டுகளில் 20 லட்சம் இளைஞர்களுக்கு, தொழில் உலகின் மனிதவளத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய சிறப்பு திறன் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.
    - ✦ இந்தத் திட்டத்திற்கு, மத்திய அரசு ₹30,000 கோடி, மாநிலங்கள் ₹20,000 கோடி, தொழில்துறை நிறுவனங்கள் ₹10,000 கோடி வழங்கவுள்ளன. மத்திய பங்கில் 50% ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி சமமாக இணைந்து நிதி அளிக்க முடிவுசெய்துள்ளன.
    - ✦ மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும், எந்த மாநிலங்களில், எந்தத் துறைகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITI) அமைக்க விரும்புகின்றன என்பதை அமைச்சகத்திடம் சமர்ப்பித்துள்ளன.


  லார்சன் & டுப்ரோ, பஜாஜ் ஆட்டோ, ஆதித்யா பிர்லா குழுமம், பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (BHEL), மசகான் டாக் ஷிப்பில்டர்ஸ், இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் ஆகிய நிறுவனங்களையும் இந்த திட்டத்தில் இணைக்க பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

Purple Pond
Plan ▸ Protect ▸ Plough ▸ Prosper
Risk Mitigation & Financial Planning


## Monthly Market Snapshot

| | 30-06-2025 | 31-07-2025 | Difference | Change in % |
|---|---|---|---|---|
| BSE Sensex | 83,606 | 81,074 | ▼ -2,532 | -3.03 |
| Nifty 50 | 25,517 | 24,735 | ▼ -782 | -3.07 |
| Nifty Bank | 57,313 | 55,897 | ▼ -1,416 | -2.47 |
| BSE Mid Cap | 46,854 | 45,743 | ▼ -1,111 | -2.37 |
| BSE Small Cap | 54,691 | 53,427 | ▼ -1,264 | -2.31 |
| Gold (Rs./10 gm) | 97,583 | 1,00,663 | ▲ 3,080 | 3.16 |
| Silver (Rs./Kg) | 1,10,800 | 1,20,200 | ▲ 9,400 | 8.48 |
| USD/INR | 85.76 | 87.47 | ▲ 1.71 | 1.99 |
| Brend Crude ($/Barrel) | 66.67 | 71.83 | ▲ 5.16 | 7.74 |
| 10 years G-Sec | 6.32 | 6.38 | ▲ 0.06 | 0.90 |


# Indian Economic Indicators





Retail inflation was 2.10% in the month of July 2025.




Wholesale inflation was -0.13% in July 2025




Government data showed that Gross Domestic Product (GDP) of the Indian economy was 7.8% in the month of June 2025.




IIP was 1.5% in Jun 2025.

# Domestic Equity Markets




















During the month of Jul 2025 Nifty 50 P/E was 21.9.




During the month of Jul 2025 Sensex P/E was 23.30.




During the month of Jul 2025 Nifty Mid 100 P/E was 32.00.




During the month of Jul 2025 Nifty Small 250 P/E was 32.60

Purple Pond
Plan ▸ Protect ▸ Plough ▸ Prosper
360° Risk Mitigation & Financial Planning

# Domestic Equity Markets

## Returns of Major NSE Indices

| 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | CYTD |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Small Cap 69.57% | Media 10.30% | Metal 45.20% | Realty 110.22% | IT 23.64% | Realty 28.49% | Pharma 60.43% | Metal 69.66% | PSU Bank 70.92% | Realty 80.37% | Pharma 38.98% | Finance 12.61% |
| PSU Bank 67.07% | Small Cap 10.20% | Auto 10.75% | Small Cap 57.47% | FMCG 13.57% | Finance 25.65% | IT 54.75% | Small Cap 61.94% | Metal 21.83% | Small Cap 48.73% | Realty 33.06% | Metal 6.30% |
| Mid Cap 60.26% | Pharma 9.26% | Mid Cap 5.41% | Mid Cap 54.53% | Finance 10.54% | Large Cap 10.42% | Small Cap 25.02% | IT 59.58% | FMCG 17.59% | Auto 46.38% | Small Cap 26.54% | PSU Bank 3.97% |
| Finance 57.34% | Mid Cap 8.41% | Finance 4.93% | Metal 48.71% | Large Cap 1.13% | IT 8.39% | Mid Cap 24.31% | Realty 54.26% | Auto 15.36% | Mid Cap 43.9% | Mid Cap 23.29% | Large Cap 2.87% |
| Auto 56.69% | FMCG 0.33% | PSU Bank 4.11% | Finance 41.56% | Pharma -7.77% | Mid Cap -0.28% | Metal 16.14% | Mid Cap 46.81% | Finance 9.55% | Pharma 36.8% | Auto 23.11% | Auto 1.94% |
| Pharma 43.42% | IT -0.03% | Large Cap 3.60% | Media 32.80% | Mid Cap -13.26% | FMCG -1.29% | Large Cap 14.82% | PSU Bank 44.37% | Large Cap 3.64% | PSU Bank 33.25% | IT 21.65% | Mid Cap 0.37% |
| Large Cap 33.17% | Auto -0.32% | FMCG 2.78% | Auto 31.47% | PSU Bank -16.47% | Small Cap -8.27% | FMCG 13.42% | Media 34.56% | Mid Cap 2.97% | FMCG 29.52% | PSU Bank 13.86% | FMCG -0.58% |
| Media 33.02% | Large Cap -2.41% | Small Cap 0.36% | Large Cap 31.15% | Metal -19.84% | Pharma -9.34% | Auto 11.43% | Large Cap 25.04% | Small Cap -3.66% | IT 23.7% | Large Cap 12.16% | Small Cap -4.23% |
| FMCG 18.22% | Finance -5.41% | Media -0.85% | FMCG 29.47% | Auto -22.99% | Auto -10.69% | Realty 5.11% | Auto 18.96% | Media -10.25% | Media 21.10% | Finance 10.02% | Pharma -4.94% |
| IT 17.84% | Realty -15.02% | Realty -4.20% | PSU Bank 24.17% | Media -25.80% | Metal -11.20% | Finance 4.46% | Finance 13.96% | Realty -10.84% | Large Cap 19.64% | Metal 7.95% | Media -10.75% |
| Realty 10.02% | Metal -31.35% | IT -7.25% | IT 12.21% | Small Cap -26.68% | PSU Bank -18.25% | Media -8.55% | Pharma 10.12% | Pharma 10.12% | Metal 16.40% | FMCG -0.58% | Realty -12.41% |
| Metal 7.02% | PSU Bank -32.91% | Pharma -14.18% | Pharma -6.32% | Realty -32.87 | Media -29.72% | PSU Bank -30.50% | FMCG 9.96% | IT -26.11% | Finance 12.50% | Media -24.54% | IT -19.23% |

- IT returns represented by NIFTY IT
- Metal returns represented by NIFTY Metal
- Realty returns represented by NIFTY Realty
- Auto returns represented by NIFTY Auto
- Pharma returns represented by NIFTY Pharma
- Media returns represented by NIFTY Media
- Finance returns represented by NIFTY Finance
- FMCG returns represented by NIFTY FMCG
- PSU Bank returns represented by NIFTY PSU Bank
- Large cap returns represented by NIFTY 100
- Mid cap returns represented by NIFTY Midcap 150
- SmallCap returns represented by Nifty SmallCap 250

*Source: MFI Explorer*


## Capital Gain Bond (54EC)

| Company Name | Annualy Interest | Date of Interest |
|---|---|---|
| REC Limited | 5.25 | 30th June |
| IRFC Limited | 5.25 | 15th October |
| PFC Limited | 5.25 | 31st July |


## RBI Bond

| Company Name | Half yearly interest | Date of Interest |
|---|---|---|
| HDFC Floating Rate Savings Bond | 8.05 | Jan and July |

# Domestic Debt Markets




10 years Benchmark Bond yield for the month of July 2025 is 6.38.




The CPR & Repo rate has been reduced to 3.00% & 5.50% on Jun 2025 and Reverse Repo rate remains same.

## Asset Class Returns

| 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | CYTD |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Equity 35.53% | Debt 8.63% | Debt 12.91% | Equity 33.54% | Gold 7.87% | Gold 23.79% | Gold 27.88% | Equity 27.47% | Gold 13.94% | Equity 23.49% | Gold 21.69% | 29.52% |
| Debt 14.31% | Equity -1.90% | Gold 11.35% | Gold 5.12% | Debt 5.91% | Debt 10.72% | Equity 15.57% | Debt 3.44% | Equity 3.66% | Gold 13.13% | Equity 16.62% | Debt 4.62% |
| Gold -7.91% | Gold -6.65% | Equity 3.70% | Debt 4.71% | Equity -1.00% | Equity 8.68% | Debt 12.25% | Gold -4.21% | Debt 2.51% | Debt 7.98% | Debt 8.78% | Equity 2.32% |

| | |
|---|---|
| Equity | Equity Returns represented by Nifty 200 Index |
| Debt | Debt Retuns represented by GILT Fund |
| Gold | Gold Returns represented by domestic prices of Gold |

*Source: MFI Explorer*

# International News

- Japan finally signed the trade agreement with US following months of stalled negotiations and tariff threats. The agreement introduces a 15% reciprocal tariff on Japanese goods entering the US, Additionally, Japan, will open its markets to key American exports such as cars, trucks, rice, and agricultural products apart from investing $550 billion in USA.
- The Indian PM completed two state visits in July 2025 to UK and Maldives that resulted
    - In UK
        - Signed the India–UK Comprehensive Economic and Trade Agreement (CETA): which is expected to boost bilateral trade by $34 billion annually
        - Double Contribution Convention that aims to reduce costs for businesses and facilitate professional mobility between the two countries.
        - Defence Industrial Roadmap: that would Promote co-design, co-development, and co-production of defence equipment for domestic and global markets
        - MoU on Criminal Justice Cooperation: Signed between India's CBI and the UK's National Crime Agency to combat corruption, fraud and organized crime
    - In Maldives
        - Coinciding with the 60th anniversary of Maldivian independence, this was the first visit after President Mohamed Muizzu took office, following a period of strained ties due to the "India Out" campaign and Maldives' tilt toward China,
        - India extended a ₹4,850 crore Line of Credit (LoC) to Maldives for development projects and annual debt repayment obligations on previous LoCs were reduced.
        - Negotiations launched for a bilateral FTA to boost trade and investment
        - MoU signed to enhance collaboration in marine resources and sustainable fishing, Meteorology, climate and weather research
        - Agreement to share India's successful digital public infrastructure solutions and agreement to introduce UPI payments in Maldives
        - Maldives also agreed to recognize Indian Pharmacopoeia, streamlining drug approvals
- India is actively considering Trans-Caspian International Trade Route (TITR)- commonly known as the Middle Corridor, as an alternative to China's Belt and Road Initiative (BRI). This is in addition to the India-Middle East-Europe Economic Corridor (IMEC) and International North South Transport Corridor (INSTC). If TITR, INSTC, and IMEC develop in tandem, they could collectively serve as a resilient alternative to the BRI, multiplying India's strategic choices and reducing its vulnerability to chokepoints.
- The trump administration signed into a law "The One Big Beautiful Bill Act (OBBBA)", on July 4, 2025, includes a wide range of tax-related provisions aimed at extending and modifying elements of the 2017 Tax Cuts and Jobs Act (TCJA). The key provisions being;
    - Individual Tax Provisions:
        - Gift, Estate, and Generation - Skipping Transfer (GST) Taxes: Permanently increases exemption to $15 million per individual starting in 2026, indexed for inflation.
        - State and Local Tax (SALT) Deduction: Temporarily increases the cap on SALT deductions.
    - Charitable Contributions:
        - Creates a temporary deduction for non-itemizing taxpayers up to $150 for single filers, $300 for married filing jointly (2025–2028).
    - Business Tax Provisions
        - Bonus Depreciation: Permanently restores 100% expensing for eligible property acquired after January 19, 2025.
        - Qualified Production Property: Allows full expensing for certain domestic manufacturing-related real property (temporary, through 2030).
        - Research & Experimentation (R&E) Expenditures: Permanently repeals mandatory amortization of domestic R&E expenses.
    - International & Real Estate Provisions: Adjustments to international tax rules and real estate investment incentives were included, though specifics vary by sector.
    - Clean Energy Provisions: Includes incentives for clean energy production and investment, though details are still being interpreted by analysts.





# சர்வதேசத் சந்தை நிலவரங்கள்

- பல மாதங்களாக நீண்ட பேச்சுவார்த்தை நிறுத்தங்கள் மற்றும் சுங்கவரி அச்சுறுத்தல்களுக்குப் பின், ஜப்பான் இறுதியாக அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தின் படி, அமெரிக்காவிற்குள் வரும் ஜப்பானிய பொருட்களுக்கு 15% பரஸ்பர சுங்கவரி விதிக்கப்படும். அதேசமயம், ஜப்பான், அமெரிக்காவின் முக்கிய ஏற்றுமதிகளான கார்கள், லாரிகள், அரிசி மற்றும் வேளாண் பொருட்களைத் தன் சந்தையில் விற்பனை செய்ய அனுமதி வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. கூடுதலாக, அமெரிக்காவில் 550 பில்லியன் டாலர் முதலீடு செய்யும் திட்டத்தையும் அறிவித்துள்ளது.
- இந்திய பிரதமர், 2025 ஜூலை மாதத்தில் இங்கிலாந்து மற்றும் மாலத்தீவு என இரண்டு நாடுகளுக்கு அரசு விஜயம் செய்தார்.
  - ★ இங்கிலாந்தில்:
    - ✦ இந்தியா – இங்கிலாந்து விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (CETA) கையெழுத்தானது. இது இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை ஆண்டுக்கு 34 பில்லியன் அமெரிக்க டாலர் வரை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.
    - ✦ Double Contribution Convention: நிறுவனங்களின் செலவுகளை குறைத்து, இரு நாடுகளுக்கிடையிலான தொழில்முறை நிபுணர்கள் சுலபமாக இடம்பெயர்ந்து பணியாற்ற உதவும்.
    - ✦ பாதுகாப்புத் தொழில்துறை செயல்திட்டம்: உள்நாட்டு மற்றும் உலக சந்தைகளுக்கான பாதுகாப்பு உபகரணங்களை இணைந்து வடிவமைத்து, உருவாக்கி, உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும்.
    - ✦ குற்றவியல் நீதி ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம்: ஊழல், மோசடி மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை எதிர்க்கும் நோக்கில், இந்தியாவின் CBI மற்றும் இங்கிலாந்தின் National Crime Agency இடையே கையெழுத்தானது.
  - ★ மாலத்தீவில்:
    - ✦ மாலத்தீவின் சுதந்திரத்தின் 60ஆம் ஆண்டு விழா நடந்த நேரத்தில், ஜனாதிபதி முகமது முயிசு பொறுப்பேற்ற பின், இந்தியப் பிரதமர் மேற்கொண்ட முதல் பயணம். 'India அவுட்' பிரச்சாரம் மற்றும் சீனாவைச் சார்ந்த போக்கின் காரணமாக, இரு நாடுகளின் உறவில் ஏற்பட்ட பதற்றம் இன்னும் நீங்காத நிலையில் இந்தப் பயணம் நடைபெற்றுள்ளது.
    - ✦ இந்தியா, மாலத்தீவின் வளர்ச்சி திட்டங்களுக்கு ₹4,850 கோடி கடன் ஒப்பந்த வசதி (Line of Credit) வழங்கியது. முந்தைய கடன்களுக்கான ஆண்டு தவணை திருப்பிச் செலுத்தும் சுமையையும் குறைத்துள்ளது.
    - ✦ வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிக்க, இரு நாடுகளுக்கிடையிலான Free Trade Agreement (FTA) குறித்து பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன.
    - ✦ கடல் வளங்கள் பயன்பாடு மற்றும் சீரான மீன்பிடித் திட்டங்கள், வானிலை ஆய்வு, காலநிலை மற்றும் வானிலை முன்னறிவிப்பு ஆராய்ச்சி போன்ற துறைகளில் இருநாடுகளின் ஒத்துழைப்பை மேம்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது.
    - ✦ இந்தியாவின் வெற்றிகரமான டிஜிட்டல் பொது கட்டமைப்பு தீர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும், மாலத்தீவில் UPI பணப்பரிவர்த்தனைகளை அறிமுகப்படுத்தவும் ஒப்பந்தம் செய்யப்பட்டது.
    - ✦ மருந்து அனுமதிச் செயல்முறையை எளிதாக்கும் வகையில், மாலத்தீவு இந்திய மருந்தியல் விதிகளை அங்கீகரிக்க ஒப்புக்கொண்டது.
- சீனாவின் Belt and Road Initiative (BRI - நிலப்பாதை மற்றும் கடல்வழி வர்த்தக இணைப்பு திட்டம்) க்கு மாற்றாக, இந்தியா Trans-Caspian International Trade Route (TITR) (காஸ்பியன் கடல் வழி பன்னாட்டு வர்த்தகப் பாதை), பொதுவாக 'Middle Corridor' என அழைக்கப்படும் பாதையைத் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. இது, India–Middle East–Europe Economic Corridor (IMEC) (இந்தியா–மத்திய கிழக்கு–ஐரோப்பா பொருளாதாரப் பாதை) மற்றும் International North–South Transport Corridor (INSTC) (பன்னாட்டு வட–தெற்குப் போக்குவரத்துப் பாதை) ஆகியவற்றிற்கு கூடுதலாக இருக்கும். TITR, INSTC, IMEC ஆகிய மூன்றும் ஒரே நேரத்தில் முன்னேற்றம் அடைந்தால், அவை BRIக்கு வலுவான மாற்றாக இருந்து, இந்தியாவின் முக்கியத் திட்ட வாய்ப்புகளை விரிவுபடுத்தி, போக்குவரத்து நெரிசல் பகுதிகள் (chokepoints) மீது உள்ள சார்பைக் குறைக்கும்.
- டிரம்ப் நிர்வாகம், "The One Big Beautiful Bill Act (OBBBA)" என்ற சட்டத்தை 2025 ஜூலை 4 அன்று நிறைவேற்றியது. இந்தச் சட்டம், 2017-இல் அமலுக்கு வந்த Tax Cuts and Jobs Act (TCJA)-இன் சில பிரிவுகளை நீட்டிப்பதும், மாற்றுவதும் உள்ளிட்ட பல்வேறு வரி தொடர்பான விதிகளை உள்ளடக்கியது. முக்கிய அம்சங்கள்:
  - ★ தனிநபர் வரி தொடர்பான அம்சங்கள்:
    - ✦ பரிசு, சொத்து, மற்றும் தலைமுறைத் தாண்டும் பரிமாற்ற வரிகள் (Gift, Estate, and Generation-Skipping Transfer – GST Taxes): 2026 முதல், ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்படும் வரிவிலக்கு வரம்பு நிரந்தரமாக 1.5 கோடி அமெரிக்க டாலர் (பணவீக்கத்துக்கு ஏற்ப மாற்றப்படும்) ஆக உயர்த்தப்பட்டது.
    - ✦ மாநில மற்றும் உள்ளூர் வரிக் கழிப்பு (State and Local Tax – SALT Deduction): மாநில மற்றும் உள்ளூர் வரிகளில் கழிக்கக்கூடிய உச்சவரம்பு தற்காலிகமாக உயர்த்தப்பட்டது.
  - ★ நன்கொடைத் தொகைகள்
    - ✦ 2025 முதல் 2028 வரை, வரியைப் பதிவு செய்யும் போது தனிப்பட்ட செலவுகளை பட்டியலிடாதவர்களும், கொடுத்த நன்கொடைக்கு வரி சலுகை பெற முடியும். தனிநபர்கள் $150 வரை, திருமணமானவர்கள் (இணைந்து பதிவு செய்யும் போது) $300 வரை சலுகை பெறலாம்.
  - ★ வணிக வரி தொடர்பான அம்சங்கள் (Business Tax Provisions):
    - ✦ போனஸ் மதிப்பிழப்பு (Bonus Depreciation): 2025 ஜனவரி 19க்குப் பிறகு வாங்கும் சலுகைக்கு தகுதி பெறும் சொத்துகளின் முழு விலையையும், வாங்கிய அதே ஆண்டில் செலவாகக் கணக்கிடலாம். இந்த சலுகை நிரந்தரமாக அமலில் வருகிறது.
    - ✦ உள்நாட்டு உற்பத்தி சொத்துகள் (Qualified Production Property): உள்நாட்டு உற்பத்தி தொடர்பான சில நிலம் மற்றும் கட்டிடங்களுக்கு, வாங்கிய ஆண்டிலேயே முழு விலையை செலவாகக் கணக்கிடலாம். இந்த சலுகை 2030 வரை மட்டுமே.
    - ✦ ஆராய்ச்சி & பரிசோதனைச் செலவுகள் (R&E Expenditures): உள்நாட்டில் நடைபெறும் ஆராய்ச்சி / பரிசோதனைச் செலவுகளை பல ஆண்டுகளாகப் பிரித்து எழுத வேண்டிய கட்டாயம் நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டது. இனி, அந்தச் செலவுகளை நடந்த ஆண்டிலேயே முழுவதும் கணக்கிடலாம்
  - ★ சர்வதேச மற்றும் நிலச் சொத்து தொடர்பான அம்சங்கள்: சர்வதேச வரி விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. நிலச் சொத்து முதலீட்டைப் பெருக்க சில ஊக்கத் திட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் மற்றும் சலுகைகள் எந்த துறையில் எவ்வாறு அமல்படுத்தப்படும் என்பது, அந்தத் துறையைப் பொறுத்து மாறுபடும்.
  - ★ மாசில்லா ஆற்றல் (Clean Energy) தொடர்பான அம்சங்கள்: இதன் உற்பத்தி மற்றும் முதலீட்டுக்கான ஊக்கத் திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால், இவை பற்றிய முழு விவரங்களை நிபுணர்கள் இன்னும் ஆராய்ந்து வருகின்றனர்.




Purple Pond
Plan ▸ Protect ▸ Plough ▸ Prosper
360° Risk Mitigation & Financial Planning






US real GDP was 3.0 in Jun 25. The S&P Global US Composite PMI Output Index was 54.6 in the month of Jul 25.




The seasonally adjusted Eurozone Composite PMI Output Index was 51.0 in Jul 25.





Caixin's China manufacturing purchasing managers' index (PMI) was 49.5 in the month of Jul 25.





Eurozone inflation was 2.0% in the month of Jun 25 & U.S. inflation to 2.7% in Jun 25.

# Global Markets


Purple Pond
Plan ▸ Protect ▸ Plough ▸ Prosper
Risk Mitigation & Financial Planning





U.S. Treasury prices was 4.38% in the month of Jul 2025




Gold price (Per 10 Grams) was ₹1,00,663 in the month of Jul 2025




Brent crude oil prices was $71.83 in the month of Jul 2025




U.S. dollar price was ₹87.47 in the month of Jul 2025.

**Corporate Fixed Deposit**

| Tenure | Period | Bajaj Finance | Mahindra Finance | PNB Housing Finance | LIC | Shriram Finance |
|---|---|---|---|---|---|---|
| 12 Months | Monthly | 6.41% | 6.40% | 6.78% | 6.50% | 6.79% |
| | Quarterly | 6.44% | 6.45% | 6.82% | 6.55% | 6.82% |
| | Half yearly | 6.49% | 6.50% | 6.88% | | 6.88% |
| | Annual | 6.60% | 6.60% | 7.00% | 6.70% | 7.00% |
| 24 Months | Monthly | 6.74% | 6.80% | 6.78% | 6.60% | 7.02% |
| | Quarterly | 6.78% | 6.80% | 6.82% | 6.65% | 7.06% |
| | Half yearly | 6.83% | 6.90% | 6.88% | | 7.12% |
| | Annual | 6.95% | 7.00% | 7.00% | 6.80% | 7.25% |
| 36 Months | Monthly | 6.74% | 6.80% | 6.87% | 6.65% | 7.35% |
| | Quarterly | 6.78% | 6.80% | 6.91% | 6.70% | 7.39% |
| | Half yearly | 6.83% | 6.90% | 6.97% | | 7.46% |
| | Annual | 6.95% | 7.00% | 7.10% | 6.85% | 7.60% |
| 48 Months | Monthly | 6.74% | 6.80% | 6.87% | | 7.35% |
| | Quarterly | 6.78% | 6.80% | 6.91% | | 7.39% |
| | Half yearly | 6.83% | 6.90% | 6.97% | | 7.46% |
| | Annual | 6.95% | 7.00% | 7.10% | | 7.60% |
| 60 Months | Monthly | 6.74% | 6.80% | 6.87% | 6.70% | 7.35% |
| | Quarterly | 6.78% | 6.80% | 6.91% | 6.75% | 7.39% |
| | Half yearly | 6.83% | 6.90% | 6.97% | | 7.46% |
| | Annual | 6.95% | 7.00% | 7.10% | 6.90% | 7.60% |
| **Senior Citizen Additional Interest** | | **0.30%** | **0.25%** | **0.30%** | **0.25%** | **0.50%** |
| **Women including Minor Additional Interest** | | | | | | **0.05%** |

# Debt Mutual Funds - A stable investment choice balancing safety and returns.

Debt Mutual Funds are mutual funds that invest in fixed-income securities like bonds, treasury bills, and money market instruments. They offer predictable returns with lower risk compared to equity funds. It is perfect for conservative investors, retirees, or anyone seeking steady income with lower volatility.

**Key benefits**

- Predictable Returns – Earn interest through bond coupons and maturity pay-outs.
- Diversification – Spread across multiple bonds, reducing default risk.
- Flexibility – Choose funds that match your investment horizon (short, medium, or long term).

**How it works**


By pooling investors' money into a diversified portfolio of bonds, Debt Mutual Funds generate returns through interest coupons, maturity pay-outs, and bond price movements.

**Real-world example**

For example, an investor holding a Debt Mutual Fund with a Yield to Maturity of 8.5% can expect to earn close to that return, after expenses, if the fund is held until maturity.

**Debt Mutual Funds - Holding period suitability**

| S.No | Investment Time Horizon | Category Description | Where do the schemes invest |
|---|---|---|---|
| 1 | Less than 7 days | Overnight Funds | Overnight securities with maturity of 1 day |
| 2 | 7 to 90 days | Liquid Funds | Debt fund and Money Market securities with 91 days maturity |
| 3 | 90 to 180 days | Ultra Short Term Funds | Debt fund and Money Market securities with 90–180 days maturity |
| 4 | 180 to 365 days | Low Duration Funds | Debt fund and Money Market securities with 6–12 months maturity |
| 5 | More than 1 year | Corporate Bond Funds | Invests minimum 80% in corporate bonds |
| 6 | More than 1 year | Banking & PSU Funds | Invests in Banking and PSU Debt Securities |




**What makes it different**

Unlike bank deposits, debt mutual funds benefit from market-linked yields and tax deferment. Portfolio duration also allows investors to align with interest rate cycles.

**Things to know**

- Returns are not guaranteed; they are sensitive to interest rate changes.
- Average maturity should match your investment horizon for best results.
- Credit risk exists – always check fund credit rating before investing.

Want to explore safe yet rewarding investments?

**Email us at contatct@purplepond.in or WhatsApp +91-94440 55430**

# டெப்ட் மியூச்சுவல் நிதிகள் - பாதுகாப்பும் வருமானமும் சமநிலைப்படுத்தும் நிலையான முதலீட்டு தேர்வு.

டெப்ட் மியூச்சுவல் நிதிகள் என்பது பத்திரங்கள், அரசுத் தவணைச் சீட்டுகள் மற்றும் பணச் சந்தை கருவிகள் போன்ற நிலையான வருமானப் பாதுகாப்புகளில் முதலீடு செய்யும் நிதிகள். இவை பங்கு நிதிகளுடன் ஒப்பிடும்போது குறைந்த அபாயத்துடன் கணிக்கக்கூடிய வருமானத்தை வழங்குகின்றன. இது முதலீட்டாளர்கள், ஓய்வுபெற்றவர்கள் அல்லது நிலையான வருமானத்தை நாடுபவர்கள் அனைவருக்கும் சரியானது.

**நன்மைகள்**

- கணிக்கக்கூடிய வருமானம் - பத்திர வட்டி கூப்பன்கள் மற்றும் காலாவதி செலுத்துதல்கள் மூலம் வட்டி சம்பாதிக்கலாம்.
- பல்வகைப்படுத்தல் - பல்வேறு பத்திரங்களில் பரவல், தவறுதலின் அபாயத்தை குறைக்கும்.
- வளைந்து கொடுக்கும் தன்மை - உங்கள் முதலீட்டு காலத்திற்கு (குறுகிய, நடுத்தர அல்லது நீண்டகாலம்) ஏற்ப நிதிகளைத் தேர்வு செய்யலாம்.

**எப்படி செயல்படுகிறது**


முதலீட்டாளர்களின் பணத்தைப் பத்திரங்களின் பல்வகைப்பட்ட தொகுப்பில் சேர்ப்பதன் மூலம், டெப்ட் மியூச்சுவல் நிதிகள் வட்டி கூப்பன்கள், காலாவதி செலுத்துதல்கள் மற்றும் பத்திர விலை மாற்றங்களின் மூலம் வருமானம் உருவாக்குகின்றன.

**உதாரணம்**

உதாரணமாக, 8.5% Yield to Maturity கொண்ட டெப்ட் மியூச்சுவல் நிதியை வைத்திருக்கும் முதலீட்டாளர், செலவுகளை கழித்த பின், அந்த நிதியை காலாவதிவரை வைத்திருந்தால், அந்த அளவுக்கு அருகிலான வருமானத்தை எதிர்பார்க்கலாம்.

**டெப்ட் மியூச்சுவல் நிதிகள் - வைத்திருக்கும் காலத்திற்கான பொருத்தம்**

| # | முதலீட்டு காலம் | வகை விளக்கம் | திட்டங்கள் எங்கு முதலீடு செய்கின்றன |
|---|---|---|---|
| 1 | 7 நாட்களுக்குள் | ஓவர்நைட் நிதிகள் | 1 நாள் காலாவதியுடன் பாதுகாப்புகள் |
| 2 | 7-90 நாட்கள் | லிக்விட் நிதிகள் | 91 நாள் காலாவதியுடன் கடன் மற்றும் பணச் சந்தை பாதுகாப்புகள் |
| 3 | 90-180 நாட்கள் | மிகக் குறுகிய கால நிதிகள் | 90-180 நாள் காலாவதியுடன் கடன் மற்றும் பணச் சந்தை பாதுகாப்புகள் |
| 4 | 180-365 நாட்கள் | குறுகிய கால நிதிகள் | 6-12 மாத காலாவதியுடன் கடன் மற்றும் பணச் சந்தை பாதுகாப்புகள் |
| 5 | 1 ஆண்டுக்கு மேல் | நிறுவன பத்திர நிதிகள் | குறைந்தது 80% நிறுவன பத்திரங்களில் முதலீடு |
| 6 | 1 ஆண்டுக்கு மேல் | வங்கி & PSU நிதிகள் | வங்கி மற்றும் PSU கடன் பாதுகாப்புகளில் முதலீடு |




**அதை வேறுபடுத்துவது என்ன?**

வங்கி வைப்புகளுக்கு மாறாக, டெப்ட் மியூச்சுவல் நிதிகள் சந்தை சார்ந்த ஈட்டல்கள் மற்றும் வரி தள்ளுபடிகளால் பயனடைகின்றன. போர்ட்ஃபோலியோ கால அளவு முதலீட்டாளர்களை வட்டி விகிதச் சுழற்சிகளுடன் ஒத்திசைக்கவும் செய்கிறது.

**கவனிக்க வேண்டியவை**

- வருமானம் உறுதியானதல்ல் அவை வட்டி விகித மாற்றங்களுக்கு உணர்வுள்ளவை.
- சிறந்த முடிவுகளுக்காக சராசரி காலாவதி உங்கள் முதலீட்டு காலத்திற்கு பொருந்த வேண்டும்.
- கடன் அபாயம் உள்ளது – முதலீடு செய்வதற்கு முன் எப்போதும் நிதி கடன் மதிப்பீட்டைச் சரிபார்க்கவும்.

பாதுகாப்பான, ஆனால் நன்மை தரக்கூடிய முதலீடுகளை ஆராய விரும்புகிறீர்களா?
எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும்: **contact@purplepond.in** அல்லது **WhatsApp +91-94440 55430** செய்யவும்.



# Snippets

- India's renewable installations saw record growth in the first half of 2025, adding 22 gigawatts (GW) of capacity, 56% more than a year earlier. India's clean energy capacity, including large hydropower and nuclear, has now surpassed that of fossil fuels. India aims to install 500GW of non-fossil sources by 2030, which would require large-scale deployment of energy storage infrastructure to stabilize intermittent power flows from solar and wind.

- With the increase in share of renewable power, comes the need to seamlessly integrate the uneven, unpredictable and intermittent power flows from solar and wind. There are two solutions to this challenge

  - Pumped Energy Storage Solutions (PESS): This solution is limited by geographical limitation of needing a series of hydroelectric power stations.

  - Battery Energy Storage Systems (BESS): Has the advantage of locating it near any substation.

  - Recently Tata Power Renewable Energy Limited (TRPEL) has signed an agreement with NHPC to set up a 30 MW / 120 MWh BESS at a 220 kV substation of Kerala State Electricity Board Ltd (KSEB). The company is already operating a BESS at Rajnandgaon, Chhattisgarh, with 100 MW /120 MWh.

- India has achieved its target of 20% ethanol blending with petrol 5- years ahead of schedule, starting from 1.5% when the program began in 2014. During this period, Ethanol production surged from 38 to 661 crore litres resulting in carbon dioxide emission reductions to an extent of 698 lakh tonnes. The program also provided significant financial benefits to India's agricultural sector, with farmers receiving ₹1.18 lakh crore and distilleries earning ₹1.96 lakh crore over the period. The initiative has also helped India save ₹1.36 lakh crore in foreign exchange costs.

- EPC tenders were floated for the construction of a second rail-cum-road over the Brahmaputra at Saraighat in Guwahati. Sanctioned as part of the doubling of the Agthori-Kamakhya railway line at an estimate of ₹1,473.77 crore, it is targeted for completion by December 2029. The 1.3 km-long bridge will have a double-line railway track on the lower deck and a three-lane roadway on the upper deck. This bridge is both commercially and strategically important for the Northeast.



# துணுக்குகள்

- 2025 முதல் பாதியில், இந்தியா புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் சாதனை வளர்ச்சியைப் பதிவு செய்தது. மொத்தம் 22 ஜிகாவாட் (GW) புதிய திறன் சேர்க்கப்பட்டது; இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இருந்ததை விட 56% அதிகமாகும். பெரிய நீர்மின் மற்றும் அணுமினையும் சேர்த்துக் கொண்டால், இந்தியாவின் பசுமை ஆற்றல் திறன், எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தியை முந்தியுள்ளது. 2030க்குள் 500 ஜிகாவாட் பசுமை ஆற்றல் திறனை அடைவதே இந்தியாவின் இலக்கு. இதை அடைய, சூரிய மற்றும் காற்றாலை உற்பத்தியின் இடைவெளிகளை சமப்படுத்த, மிகப்பெரிய அளவில் ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் தேவைப்படும்.

- புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கு அதிகரிக்கும் போது, சூரிய, காற்றாலை மின் உற்பத்தியில் ஏற்படும் மாறுபாடுகள் மற்றும் இடைவெளிகளை தடையின்றி ஒருங்கிணைக்கும் தேவை எழுகிறது. இந்த சவாலுக்கான இரண்டு முக்கியத் தீர்வுகள் உள்ளன.

  - பம்ப் சேமிப்புத் தீர்வு: இது செயல்பட, நீர்மின் நிலையங்கள் தொடர் முறையில் அமைந்திருக்க வேண்டும் என்பதால், புவியியல் வரம்புகள் அதிகம்.

  - பேட்டரி சேமிப்பு தீர்வு: எந்த மின் துணை நிலையத்தருகிலும் நிறுவக்கூடியது என்பதால், இட வரம்புகள் இல்லாமல் மிகச் சுலபமான விருப்பமாக அமையும்.

  - டாடா பவர் ரினியூபிள் எனர்ஜி லிமிடெட் (TPREL) நிறுவனம், தேசிய நீர்மின் மின்சார கழகம் (NHPC) உடன் ஒப்பந்தம் செய்து, கேரள மாநில மின்சார வாரியம் (KSEB) உடைய 220 கிலோவோல்ட் துணை நிலையத்தில் 30 மெகாவாட் திறன் மற்றும் 120 மெகாவாட் மின் சேமிப்பு கொள்ளளவு கொண்ட பேட்டரி மின்சக்தி சேமிப்பு அமைப்பை (BESS – Battery Energy Storage System) அமைக்க உள்ளது. BESS (Battery Energy Storage System) என்பது, சூரிய மற்றும் காற்றாலை போன்ற இடைவேளையற்ற பசுமை ஆற்றலால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைச் சேமித்து, தேவைக்கேற்ப பின்னர் விநியோகிக்க உதவும் மின்சார சேமிப்பு தொழில்நுட்பமாகும். இந்நிறுவனம் ஏற்கனவே சத்தீஸ்கர் மாநிலம் ராஜ்நந்த்காவில் 100 மெகாவாட் திறன் மற்றும் 120 மெகாவாட் மின் சேமிப்பு கொள்ளளவு கொண்ட BESS அமைப்பை செயல்படுத்தி வருகிறது.

- இந்தியா, திட்டமிட்ட காலத்துக்கு 5 ஆண்டுகள் முன்னதாகவே 20% எத்தனாலை பெட்ரோலில் கலக்கும் இலக்கை எட்டியுள்ளது. 2014-ல் திட்டம் தொடங்கியபோது கலவை விகிதம் வெறும் 1.5% மட்டுமே இருந்தது. அதன்பின் எத்தனால் உற்பத்தி 38 கோடி லிட்டரில் இருந்து 661 கோடி லிட்டராக உயர்ந்தது. இதனால் 6.98 கோடி டன்னுகள் கார்பன் டையாக்சைடு உமிழ்வைத் தவிர்க்க முடிந்ததோடு, விவசாயத் துறையில் விவசாயிகள் மொத்தத்தில் ₹1.18 லட்சம் கோடி வருவாய் பெற்றார்கள்; டிஸ்டில்லரிகளும் ₹1.96 லட்சம் கோடி ஈட்டின. மேலும், இந்தியா வெளிநாட்டு நாணயச் செலவில் ₹1.36 லட்சம் கோடி சேமித்தது.

- பிரம்மபுத்திரா நதியின் சாராய்காட் (குவாஹட்டி) பகுதியில் இரண்டாவது ரயிலும் சாலையும் இணைந்த பாலம் அமைக்கும் பணிக்கான EPC (Engineering, Procurement, Construction) டெண்டர்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆக்தோரி–காமாக்க்யா ரயில் பாதை இரட்டிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, ₹1,473.77 கோடி மதிப்பில் ஒப்புதல் பெற்றுள்ள இத்திட்டம், 2029 டிசம்பருக்குள் நிறைவேறும் இலக்குடன் உள்ளது. 1.3 கிமீ நீளமுள்ள இப்பாலத்தின் கீழ் தளத்தில் இரட்டை ரயில் பாதையும், மேல் தளத்தில் மூன்று வழிச் சாலையும் அமைக்கப்படும். வடகிழக்கின் வணிக வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் இப்பாலம் மிக முக்கியப் பங்காற்றும்.

# Wrap-up

- It is to be noted that the High-frequency indicators and growth momentum across key sectors of the Indian economy has indicated signs of slowdown, despite the RBI's efforts to support growth through rate cuts and other liquidity measures,
  - India's bank credit growth, declined to 9% compared to 16% a year ago
  - GST collections growth, declined to 6.2% compared to 11% a year ago,
  - The total exports (goods and services) remained subdued at 6% growth. And with the upcoming tariffs, could get more challenging.
  - Passenger vehicle (PV) sales declined to 2%, compared to 7% last year. Medium and Heavy Commercial Vehicle (MHCV) sales have declined by 3%.
  - In real estate sector, the value of property sales in the top 7 cities declined to 4% compared to 28% last year.
  - Wage growth, in BSE500 companies, declined to 6% compared to 12% last year.
  - Core sectors growth declined to 3%, compared to 8% last year.
  - Diesel consumption declined to 1%.
  - Marginal drop in electricity use
  - Widening state deficits, sharp reduction in Union govt grants
  - Profit growth for BSE500 companies (excluding oil marketing companies) declined to 10%, compared to 21% last year.
- The only silver lining could be a good harvest, leading to continued lower inflation which could probable trigger another rate cut by 3rd quarter of FY 2025-26.
- With most high-frequency indicators moving back to single-digit growth, akin to the pre-pandemic years of 2018-19, clearly signals a slowdown in economic activities. This combined with a fragile external sector shouts at caution.
- Investors are advised to stay cautious with both Equities and Metals (Gold & Silver) since metals as an asset class too has run up significantly.





# சாரம்

- வட்டி விகிதக் குறைப்புகள் மற்றும் பணப்புழக்கத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகள் மூலம் ரிசர்வ் வங்கி வளர்ச்சியை ஆதரிக்க முயன்றாலும், முக்கிய துறைகளின் வளர்ச்சி அறிகுறிகள் மந்தநிலையை வெளிப்படுத்துகின்றன.
    - இந்திய வங்கிக் கடன் வளர்ச்சி கடந்த ஆண்டின் 16% இருந்து 9% ஆகக் குறைந்துள்ளது.
    - அதேபோல், ஜிஎஸ்டி வசூல் வளர்ச்சியும் கடந்த ஆண்டின் 11% இருந்து 6.2% ஆகச் சரிந்துள்ளது.
    - மொத்த ஏற்றுமதி (பொருட்கள் மற்றும் சேவைகள்) 6% வளர்ச்சியிலேயே மட்டுமே தங்கி உள்ளது. மேலும் வரவிருக்கும் சுங்க வரிகள் நிலையை இன்னும் சவாலாக மாற்றக்கூடும்.
    - பயணிகள் வாகன (Passenger Vehicle – PV) விற்பனை 2% வளர்ச்சியிலேயே இருந்தது; கடந்த ஆண்டு இது 7% இருந்தது. நடுத்தர மற்றும் கனரக வர்த்தக வாகன (MHCV) விற்பனையும் 3% குறைந்துள்ளது.
    - நிலச் சொத்து துறையில், முன்னணி 7 நகரங்களில் சொத்து விற்பனை மதிப்பு கடந்த ஆண்டு 28% உயர்வாக இருந்த நிலையில், இவ்வாண்டு 4% வளர்ச்சியிலேயே தங்கி உள்ளது.
    - BSE500 நிறுவனங்களில் ஊதிய வளர்ச்சி கடந்தாண்டின் 12% லிருந்து இவ்வாண்டு 6% ஆகக் குறைந்துள்ளது.
    - இந்தியாவின் அடிப்படைத் துறைகளின் வளர்ச்சி, கடந்த ஆண்டு 8% இருந்த நிலையில், இவ்வாண்டு 3% ஆகக் குறைந்துள்ளது.
    - டீசல் நுகர்வு 1% குறைந்துள்ளது.
    - மின்சாரப் பயன்பாட்டில் சிறிய அளவில் குறைவு பதிவாகியுள்ளது.
    - மாநிலங்களின் நிதி பற்றாக்குறை மேலும் அதிகரித்துள்ளது. மத்திய அரசின் நிதி உதவிகளும் கணிசமாகக் குறைந்துள்ளன.
    - BSE500 நிறுவனங்களின் (எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களைத் தவிர்த்து) லாப உயர்வு, கடந்த ஆண்டு 21% இருந்த நிலையில், இவ்வாண்டு 10% ஆகக் குறைந்துள்ளது.
- எதிர்பார்க்கப்படும் நல்ல அறுவடை, பணவீக்கம் குறைந்த நிலையில் தொடர உதவும். இது, 2025-26 நிதியாண்டின் மூன்றாம் காலாண்டுக்குள் மீண்டும் வட்டி விகிதக் குறைப்பைத் தூண்டக்கூடும்.
- ஆனால், பெரும்பாலான பொருளாதாரக் குறியீடுகள், ஒற்றை இலக்க வளர்ச்சிக்குத் திரும்பியுள்ளன. இது, 2018-19 தொற்றுநோய் காலத்துக்கு முன் இருந்த நிலையைப் போன்றே, பொருளாதார செயல்பாடுகள் மந்தமாகும் எச்சரிக்கையைத் தருகிறது. வெளிநாட்டு வர்த்தக நிலையும் பலவீனமாக இருப்பதால், மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டியது அவசியம்.
- முதலீட்டாளர்கள் பங்குகள் மற்றும் உலோகங்களில் (தங்கம், வெள்ளி) அதிக எச்சரிக்கையுடன் இருக்க பரிந்துரைக்கப்படுகிறது. ஏனெனில், உலோகங்கள் சொத்து வகையாகவே ஏற்கனவே அதிக உயர்வை எட்டியுள்ளதால், இந்நிலையில் புதிய முதலீடுகள் சவால்களை ஏற்படுத்தலாம். எனவே, நிதானமாகவும், தெளிவான நீண்டகால நோக்கத்துடனும் செயல்படுவது அவசியம்.





# Quick Glossary




| Term | Definition & Context |
|---|---|
| ABS | Anti-lock Braking System, a safety system in vehicles that prevents wheels from locking up during braking, reducing accident risks<br>ஆண்டி-லாக் பிரேக்கிங் சிஸ்டம் - வாகனங்களில் பிரேக் அடிக்கும் போது சக்கரம் பூட்டப்படுவதைத் தடுக்கும் பாதுகாப்பு முறை. இது விபத்து அபாயங்களை குறைக்கிறது. |
| BESS | Battery Energy Storage System, technology that stores energy for later use to balance supply and demand in renewable power grids.<br>பேட்டரி எனர்ஜி ஸ்டோரேஜ் சிஸ்டம் – புதுப்பிக்கத்தக்க மின் சக்தி தேவையை சமநிலைப்படுத்த, மின் சக்தியை சேமித்து தேவையான நேரத்தில் வழங்கும் தொழில்நுட்பம். |
| BIT | Bilateral Investment Treaty, an agreement between two countries to promote and protect private investments made by companies of each country.<br>இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் - இரண்டு நாடுகளுக்கிடையேயான நிறுவன முதலீட்டுகளை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் செய்யப்படும் உடன்படிக்கை. |
| BRI | Belt and Road Initiative, China's global infrastructure development strategy aimed at enhancing trade routes.<br>பெல்ட் அண்ட் ரோடு இனிஷியேட்டிவ் – சீனாவின் உலகளாவிய கட்டமைப்பு வளர்ச்சி திட்டம். |
| CETA | Comprehensive Economic and Trade Agreement, a bilateral pact aimed at boosting trade and investment between countries.<br>காம்பிரஹென்சிவ் எகனாமிக் அண்ட் டிரேட் அக்ரீமென்ட் - இருநாடுகளுக்கிடையேயான வர்த்தக மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கும் இருதரப்பு ஒப்பந்தம். |
| CPI | Consumer Price Index, a measure that examines the weighted average of prices of a basket of consumer goods and services.<br>நுகர்வோர் விலை குறியீடு - நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை மாற்றங்களை அளக்கும் முறை. |
| EPFO | Employees' Provident Fund Organisation, a statutory body under the Government of India managing retirement savings for employees.<br>ஊழியர் நல நிதி நிறுவனம் - இந்திய அரசின் கீழ் செயல்படும், ஊழியர்களின் ஓய்வூதிய சேமிப்புகளை நிர்வகிக்கும் சட்டபூர்வ அமைப்பு. |

# Quick Glossary

| | |
|---|---|
| FDI | Foreign Direct Investment, an investment made by a firm or individual in one country into business interests in another country.<br>நேரடி வெளிநாட்டு முதலீடு - ஒரு நாட்டிலுள்ள நிறுவனம் அல்லது நபர், மற்றொரு நாட்டின் வணிகத்தில் முதலீடு செய்வது. |
| FTA | Free Trade Agreement, a pact between two or more nations to reduce barriers to imports and exports among them.<br>இலவச வர்த்தக ஒப்பந்தம் - இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தடைகளை குறைக்கும் ஒப்பந்தம். |
| GST | Goods and Services Tax, an indirect tax levied on the supply of goods and services in India, replacing multiple indirect taxes.<br>பொருட்கள் மற்றும் சேவைகள் வரி - இந்தியாவில் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலுக்கு விதிக்கப்படும் மறைமுக வரி. |
| IMEC | India-Middle East-Europe Economic Corridor, a proposed transport and trade corridor to enhance connectivity between India, the Middle East, and Europe.<br>இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார பாதை - இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவுக்கிடையேயான இணைப்பை மேம்படுத்தும் போக்குவரத்து மற்றும் வர்த்தக திட்டம். |
| INSTC | International North-South Transport Corridor, a 7,200 km-long multi-mode network of ship, rail, and road route for moving freight between India, Iran, Afghanistan, Russia, and Europe.<br>இன்டர்நேஷ்னல் நார்த்-சவுத் டிரான்ஸ்போர்ட் காரிடார் - இந்தியா, ஈரான், ஆப்கானிஸ்தான், ரஷ்யா மற்றும் ஐரோப்பாவை இணைக்கும் 7,200 கிமீ நீளமுள்ள கப்பல், ரயில் மற்றும் சாலை போக்குவரத்து பாதை. |
| LoC | Line of Credit, a financial arrangement where a lender provides a borrower a maximum loan limit available to be drawn when needed.<br>லைன் ஆஃப் கிரெடிட் - கடனாளர் தேவையானபோது பெறக்கூடிய அதிகபட்ச கடன் வரம்பு. |
| MSME | Micro, Small, and Medium Enterprises, businesses that maintain revenues, assets, or number of employees below a certain threshold.<br>மைக்ரோ, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் - வருவாய், சொத்துகள் அல்லது பணியாளர்கள் எண்ணிக்கையில் குறிப்பிட்ட வரம்புக்குள் இயங்கும் வணிகங்கள். |
| UPI | Unified Payments Interface, an instant real-time payment system developed in India to facilitate inter-bank transactions.<br>யூனிஃபைட் பேமென்ட்ஸ் இன்டர்ஃபேஸ் - வங்கிகளுக்கிடையேயான உடனடி நேரடி பரிவர்த்தனைகளை எளிதாக்க இந்தியாவில் உருவாக்கப்பட்ட முறை. |

# Purple Pond

Plan ▸ Protect ▸ Plough ▸ Prosper

360° Risk Mitigation & Financial Planning

Suite 304, Challamall, Door # 11/11A,
Sir Theyagaraya Road, T.Nagar, Chennai - 600 017.
Phone : +91 78100 27636 / Email : contact@purplepond.in

*www.purplepond.in*

FIXED DEPOSITS | INSURANCES | MUTUAL FUNDS | NPS | NCD & BONDS | PMS | WILLS

CHENNAI • COIMBATORE • HYDERABAD
KUMBAKONAM • SALEM • TRICHY

**Disclaimer**
All information contained in this document has been obtained by Purplepond from sources believed by it to be accurate and reliable. Although reasonable care has been taken to ensure that the information herein is true, such information is provided 'as is' without any warranty of any kind, and Purplepond or its affiliates or group companies and its respective directors, officers, or employees in particular, makes no representation or warranty, express or implied, as to the accuracy, suitability, reliability, timelines or completeness of any such information. All information contained herein must be construed solely as statements of opinion, and Purplepond, or its affiliates and its respective directors, officers, or employees shall not be liable for any losses or injury, liability or damage of any kind incurred from and arising out of any use of this document or its contents in any manner, whatsoever. Opinions expressed in this document are not the opinions of our holding company, Purplepond, and should not be construed as any indication of credit rating or grading of Purplepond for any instruments that have been issued or are to be issued by any entity.